**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.50/2023** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.9** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | செல்வராஜ் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அருமடல் கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். வழக்கில் இறந்துபோன ராமகிருஷ்ணன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் 26ம் தேதி ராமகிருஷ்ணன் இறந்துவிட்டதாக செய்தி வந்தது. பின்னர் போலிசார் வந்தார்கள். அடித்துபோட்டுவிட்டதாக சொன்னார்கள். இரும்பு பைப் கிடந்ததை காட்டினார்கள். கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். போஸ்ட்மார்டம் செய்தவற்கு கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். போலிசார் அவர் உடலை செக் செய்து பார்த்தார்கள். மண்டையில் காயம் இருந்தது. காதில் ரத்தம் வந்தது. அதை போலிசார் குறித்து கொண்டார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையெழுத்து போடசொன்னார்கள் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கை 3வது தாக உள்ளது என்னுடைய கையெழுத்து. அது அ.சா.ஆ.7 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ராமகிருஷ்ணன் இறந்துவிட்டதாக அவர் தம்பி எனக்கு தகவல் சொன்னார். அவர் பெயர் ஞாபகமில்லை. நான் அங்கு 11.00 மணிவாக்கில் சென்றேன். அங்கு கும்பல் நிறைய இருந்தது. யார் யார் இருந்தார்கள் என்று தெரியாது. போலிசார் பிரேத பரிசோதனைக்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதிஉள்ளது என்று எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்ற விவரம் எனக்கு தெரியும். அவர் அவருடைய தாயர் வீட்டில் இறந்துகிடந்தார். அவர் குடிபோதையில் தவறி விழுந்துஇறந்துவிட்டார் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமகிருஷ்ணன் தம்பி சொன்னதின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.